OS: 106/2021

Date: 03.10.2024

பெயர் :கோபால்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>**குறுக்கு விசாரணை :**</u>- 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்

1 ம் பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான். எனக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். எனக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் சொத்து சம்மந்தமாக பாகப்பிரிவினை சம்மந்தமாக எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சொத்திற்கு அட்வான்ஸ் வாங்கிவிட்டு அது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. மேற்படி சொத்தினை 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். ஆனால் வழக்கு நிலுவையில் இருக்கும் போதே விற்பனை செய்துவிட்டார். பாகப்பிரிவினையில் C செட்டியூல் சொத்து 1 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. C செட்டியூல் சொத்தை பொறுத்து ஏற்கனவே 1 ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் வங்கி கடன் பெற்று அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. மேலும் 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு சொத்தினை விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். நான் 3 முதல் 5 பிரதிவாதிகளை பொறுத்து என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே கிரயம் செய்ததால் அது குறித்து எந்த ஆவணங்களும் ஏற்படுத்த வேண்டாம் என கேட்டுள்ளேன். நான் கேட்டுள்ள பரிகாரங்கள் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக கேட்கமுடியாது என்பதால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. பதிவு சட்ட விதிகளின்படி தான் சார்பதிவளார் 3 ம் பிரதிவாதி ஆவணங்களை பதிவு செய்வார் என்றும், அதனை பொறுத்து நான் தடுக்கவோ, பரிகாரம் கோரவோ முடியாது என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை செய்யப்பட்ட பின்பு தனிப்பட்ட சொத்துக்கள் அவரவர்களுக்கு ஆகிவிட்டதால் அந்த சொத்துக்களில் நான் முன்னுரிமை கேட்டு வழக்கு போடமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>:- இல்லை.

ஒப்பம்/-PW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.